

சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 கார் பந்தயம் நிறைவடைந்தது. இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் ஹைதராபாத் அணியைச் சேர்ந்த அலிபாய் முதலிடமும், அகமதாபாத் அணியின் திவி நந்தன் 2வது இடமும், பெங்களூரு அணியைச் சேர்ந்த ஜேடன் பாரியாட் 3வது இடமும் பிடித்தனர்.



## “நான் கனவிலும் நினைக்கவில்லை...!”

**–நடிகர் நாக சைதன்யா**

சென்னை, செப்.3 -

இது ஒரு சிறந்த அனுபவம், சென்னையில் இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை; ஃபார்முலா 4 கார் பந்தயத்திற்கு உறுதுணையாக இருந்த அரசுக்கும், பொதுமக்களுக்கும் நன்றி; பல வளர்ந்து வரும் ஓட்டுநர்களுக்கு இது வாய்ப்பளிக்கிறது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை ஃபார்முலா ஸ்ட்ரீட் ரேஸிங் சர்க்யூட் போட்டிக்கிடையே தமிழ்நாட்டைச் சேர்ந்த மகளிர் 25 பேர் அடங்கிய பைக் ரைடர்ஸ் அணியினர் நடத்திய சாகச நிகழ்வை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் ஆர்.பிரியா ஆகியோர் உள்ளனர்.



சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற ஃபார்முலா 4 கார் பந்தயத்தை மாணவர்களுடன் அமர்ந்து பார்த்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

### அமைச்சர் தங்கம் தென்னரசுவின் நேர்முக உதவியாளர்

# இரா.பாலகுரு இல்லத் திருமணம்! கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்–தங்கம் தென்னரசு முன்னிலை !

விருதுநகர், செப். 3 -

அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களின் நேர்முக உதவியாளர் இரா.பாலகுரு இல்லத் திருமண விழாவை தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் இரா. ஆதிலட்சுமி,நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மணிமேகலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேனாள் காவல்துறை தலைவர் செ.சந்திரசேகர் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், ஆகியோர் திருமணத்தில் கலந்து கொள்கின்றனர்.

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் இரா.பாலகுரு சு.மகேஸ்வரி, ஆகியோரின் மகள் அனன்யா மற்றும் பாலமுருகன் ஜெயா ஆகியோரின் மகன் விக்னேஷ் என்பவருக்கும் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மதுரை ரோடு வேலம்மாள் வளாகத்தில் அமைந்துள்ள ஐடா ஸ்கட்டர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

# சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் ஜெயராமன் தலைமை!

சிவகங்கை, செப். 3 -

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தெற்கு ஒன்றியக் கழக செயற்குழுக் கூட்டம் ஒன்றியக் கழகச் செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் சிவகங்கை தெற்கு ஒன்றிய அலுவலகமான அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளில் தீவிரமாக ஈடுபடுவது.

இந்த கூட்டத்தில் ஒன்றிய துணைச் செயலாளர் பஞ்சவர்ணம் , மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் திருமதி மார்க்ரெட் கமலா, நிர்வாகிகள் மனோகரன், பிரவீன், பொருளாளர் பாண்டியராஜன், ராஜாங்கம், அய்யனார் ஆனந்தராஜ், தங்கச்சாமி ஐயப்பன், முனியாண்டி, ஆறுமுகம், சம்பத், கணேசன், மருது பாண்டி அழகர், அழகு, சுந்தரம், முத்துகிருஷ்ணன், கருப்பையா, முத்துச்சாமி, செந்தில்குமார், ஒன்றியக் கவுன்சிலர்கள் ரமேஷ், வேல்முருகன், பொன்னுச்சாமி, காட்டு ராஜா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில பொதுச் செயலாளர்

# பா.மணிமாறன் இல்ல மணவிழா! மு.சண்முகம் எம்.பி. தலைமையில்!

## அமைச்சர் பெருமக்கள் – கழக முன்னணியினர் வாழ்த்துரை!

சென்னை, செப். 3-

தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில பொதுச் செயலாளர் பா.மணிமாறன் - ம.விஜயலட்சுமி ஆகியோரின் புதல்வி ம.மதுமிதாவுக்கும், தூத்துக்குடி மாவட்டம், புங்கவர் நத்தம் ஏ.என். தேன்ராஜ் - (நினைவில் வாழும்) டி.பெத்தனாட்சி - நலமுடன் டி.தங்கம்மாள் ஆகியோரின் புதல்வர் தே.காத்தவராய னுக்கும் மணவிழா 6.9.2024 - வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வேலப்பன் சாவடி, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கே.வி.என். கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறும் இம்மணவிழாவிற்கு தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. தலைமை வகித்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமை கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்க பேரவை நிர்வாகிகள்,

மாநகர மேயர்கள், துணை மேயர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் அனைத்து வட்டக் கழகச் செயலாளர்கள், மாநகர மாமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர், முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செல்லும் சாலையில் ரூபாய் 8 லட்சம் மதிப்பில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்கள் மற்றும் மின் விளக்குகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (02.09.2024 – திங்கள்கிழமை) பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டம் நெற்கட்டும் செவல் கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவன் அவர்களின் 309–வது பிறந்த நாளினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (01.09.2024) அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன் திருமலைக்குமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு அன்னாரது திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.